www.boomiirjt.com Volume 2, Issue 2 Apr – Jun 2026 E - ISSN: 3139 -1893

BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893 An international open access, peer- reviewed, refereed journal

# இனவரைவியல் நோக்கில் சு.தமிழ்ச்செல்வியின் 'ஆறுகாட்டுத்துறை' நாவல்

# Su. Tamilselvi's Novel 'Aarugattuthurai' from an Ethnographic Perspective

ஆய்வாளர் : **எ.ஹேமாவதி**

முனைவர் பட்ட ஆய்வாளர், சுப்பிரமணிய பாரதியார் தமிழ்மொழி மற்றும் இலக்கியப்புலம்,

புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி – 605 014, இந்தியா.

நெறியாளர் : **முனைவர் வ.தனலட்சுமி**

இணைப் பேராசிரியர், சுப்பிரமணிய பாரதியார் தமிழ்மொழி மற்றும் இலக்கியப்புலம்,

புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி – 605 014, இந்தியா.

Research Scholar **: E.Hemavathi**

Ph.D. Research Scholar, Subramania Bharathi School Tamil Language and Literature, Pondicherry University, Puducherry – 605 014, India. Email: hemavathiephd@gmail.com **ORCID: https://orcid.org/0009-0000-8610-3315**

Research Supervisor**: Dr. V. Dhanalakshmi**

Associate Professor, Subramania Bharathi School Tamil Language and Literature, Pondicherry University, Puducherry – 605 014, India. **ORCID: https://orcid.org/0000-0002-0368-6509**

**Abstract**

In the contemporary Tamil literary landscape, research that integrates knowledge from other academic disciplines is gaining significant importance. In this context, studies based on Ethnography, a subfield of Anthropology, hold great prominence. Particularly, such research conducted on fictional literature created by writers is carried out under the frameworks of 'Literary Anthropology' and 'Literary Ethnography' to highlight the deep connection between literature and society. The lifestyle of the people of the Neithal land (coastal region), the vast sandy landscape of the Tamil territory, has been documented in various dimensions from the Sangam era down to contemporary literature. With this perspective, Su. Tamilselvi's novel Aarugattuthurai (2013), centered on the Neithal landscape, depicts the life and culture of a specific community. By identifying the ethnographic elements in this novel, it is possible to bring to light the unique cultural identities found in the lives of these people. This article has been written based on this objective.

**Key Words:** Coastal land (Neithal), Fishermen, Lifestyle, Ethnographical elements

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கியச் சூழலில் பிற துறைசார்ந்த அறிவுப் புலத்தை இணைத்து மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் சமீபக் காலங்களில் முக்கியத்துவம் பெறுகின்றன. அந்தவகையில், மானிடவியல் (Anthropology) துறையின் உட்பிரிவான இனவரைவியல் (Ethnography) சார்ந்த ஆய்வுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. அதிலும் குறிப்பாக, எழுத்தாளர்கள் படைக்கின்ற புனைவிலக்கியங்களில் மேற்கொள்ளப்படும் இத்தகைய ஆய்வுகள், 'இலக்கிய மானிடவியல்', 'இலக்கிய இனவரைவியல்' என்கிற நிலையில் படைப்புக்கும் சமூகத்திற்குமான தொடர்பினை உணர்த்தும் வகையில் நிகழ்த்தப்பெறுகின்றன. தமிழ் நிலத்தின் பெருமணல் பகுதியான நெய்தல் நில மக்களின் வாழ்க்கை முறையினை சங்க காலம் தொடங்கித் தற்கால இலக்கியங்கள் வரை பல நிலைகளில் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இந்நோக்குடன், நெய்தல் நிலத்தை மையமிட்டு எழுதப்பட்டுள்ள சு. தமிழ்ச்செல்வியின் 'ஆறுகாட்டுத்துறை' (2013) எனும் நாவல், குறிப்பிட்ட சமூக மக்களின் வாழ்வியலை மையமிட்டு விவரிப்பதாக அமைந்துள்ளது.

இந்நாவலில் காணலாகும் இனவரைவியல் கூறுகளை இனங்காண்பதன் மூலம், அம்மக்களின் வாழ்வியலில் காணப்படும் தனித்துவமான அடையாளங்களை வெளிக்கொணர இயலும். இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**குறிச்சொற்கள்:** நெய்தல், மீனவர், வாழ்வியல், இனவரைவியல் கூறுகள்

**முன்னுரை**

தமிழ் இலக்கியச் சூழலில் பிற துறைசார்ந்த அறிவுப் புலத்தை இணைத்து மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் சமீபக் காலங்களில் முக்கியத்துவம் பெறுகின்றன. அந்தவகையில், மானிடவியல் (Anthropology) துறையின் உட்பிரிவான இனவரைவியல் (Ethnography) சார்ந்த ஆய்வுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. அதிலும் குறிப்பாக, எழுத்தாளர்கள் படைக்கின்ற புனைவிலக்கியங்களில் மேற்கொள்ளப்படும் இத்தகைய ஆய்வுகள், ‘இலக்கிய மானிடவியல்’, ‘இலக்கிய இனவரைவியல்’ என்கிற நிலையில் படைப்புக்கும் சமூகத்திற்குமான தொடர்பினை உணர்த்தும் வகையில் நிகழ்த்தப்பெறுகின்றன. தமிழ் நிலத்தின் பெருமணல் பகுதியான நெய்தல் நில மக்களின் வாழ்க்கை முறையினை சங்க காலம் தொடங்கித் தற்கால இலக்கியங்கள் வரை பல நிலைகளில் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இந்நோக்குடன், நெய்தல் நிலத்தை மையமிட்டு எழுதப்பட்டுள்ள சு.தமிழ்ச்செல்வியின் ‘ஆறுகாட்டுத்துறை’ (2013) எனும் நாவல், குறிப்பிட்ட சமூக மக்களின் வாழ்வியலை மையமிட்டு விவரிப்பதாக அமைந்துள்ளது. இந்நாவலில் காணலாகும் இனவரைவியல் கூறுகளை இனங்காண்பதன் மூலம், அம்மக்களின் வாழ்வியலில் காணப்படும் தனித்துவமான அடையாளங்களை வெளிக்கொணர இயலும். இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**இனவரைவியல் – விளக்கம்**

மானிடவியல் துறையின் பிரிவுகளில் ‘இனவரைவியல்’ (Ethnography) முக்கிய இடம்பெறுகிறது. அவ்வகையில், ‘இனவரைவியல்’ என்பதற்கான அறிஞர்களின் விளக்கங்களை முதற்கண் இங்கு காண்போம். “இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது சமூகத்தைப் பற்றிய வரைவு எனும் பொருளைத் தருகிறது. இன்னொரு வகையில் சொல்வதானால் ஓர் இனக்குழுவைப் பற்றிய முறையான, முழுமையான, விளக்கமான படிப்பு என்றும் கூறலாம்.” (இலக்கிய மானிடவியல், ப.7)என்கிறார் மானிடவியல் அறிஞர் பக்தவத்சலபாரதி. இக்கூற்றின்படி, ஒரு தனித்த மக்கள் குழுவின் ஒட்டுமொத்த வாழ்க்கையையும் உள்வாங்கிக் கொண்டு அதனை விளக்கிச் சொல்வது இனவரைவியலின் அடிப்படை நோக்கமாக விளங்குகிறது.

‘தமிழில் இலக்கிய மானிடவியல்’ என்னும் நூலில் ஆ. தனஞ்செயன், “குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினரின் சமூக – பண்பாட்டு வாழ்க்கை முறையை ஒருவகைத் திட்டவட்டமான முனைப்புடன் களப்பணியின் மூலம் உற்றுநோக்கித் திரட்டும் தரவுகளைக் கொண்டு ஓர் ஆய்வாளன் படைக்கும் பண்பாட்டுச் சித்திரிப்பாக அமையும் ஒரு தனி வரைவு நூலே இனவரைவியல்” (தமிழில் இலக்கிய மானிடவியல், ப.10) என்ற குறிப்பினை அளிக்கிறார். மேலும்,“இனவரைவு இலக்கியம் என்பது இலக்கியத்தின் வழியாக ஒரு குறிப்பிட்ட பண்பாட்டை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விளக்குவது ஆகும்.” (தொல்காப்பியமும் இனவரைவியல் கதையியலும், பக்.22) என்று ஞா.ஸ்டீபன் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவ்வரையறைகளின் மூலம் இவ்வுலகில் வாழும் பல்வேறு மானிடச் சமூகங்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மையான பழக்க வழக்கங்களையும் வாழ்வியல் முறைகளையும் கொண்டு விளங்குகின்றன என்பதை உணர்ந்துகொள்ள முடிகிறது. அதனை வெளிக்கொணரும் ஆய்வு முறையாக, இனவரைவியல் ஆய்வு இருப்பதை விளங்கிக்கொள்ள முடிகிறது.

**இனவரைவியலும் இலக்கியமும்**

இனவரைவியல் ஆய்வினை மேற்கொள்ளும்போது, ஒரு தனிப்பட்ட மக்கள் குழுவிடமிருந்து அனைத்து விதமான வாழ்வியல் கூறுகளும் தரவுகளாகச் சேகரிக்க வேண்டியுள்ளது. இத்தகைய இனவரைவியல் ஆய்வுக்கான கூறுகளாக, "நில அமைப்பு, சுற்றுச்சூழல், காலநிலை, பருவ காலங்கள், மழை, வெப்பம், தாவரங்கள், விலங்குகள், வாழிடம், குடியிருப்பு முறை, பொருள்சார் பண்பாடு, குடும்ப அமைப்பு, திருமண முறை, உறைவிட முறை, வாழ்வியல் சடங்குகள், குழந்தை வளர்ப்பு முறை, மணக்கொடை, மணவிலக்கு, மறுமண முறைகள், பண்பாட்டுவயமாக்க முறை, உளவியற் பாங்குகள், வாழ்க்கைப் பொருளாதாரம், தொழிற்பகுப்பு முறை, உற்பத்தி முறை, நுகர்வு முறை, பங்கீட்டு முறை, பரிமாற்ற முறை, உணவு முறை, கைவினைத் தொழில்கள், அரசியல் முறைகள், அதிகார உறவுகள், சமூகக் கட்டுப்பாடு, மரபுசார் சட்டங்கள், சமய நம்பிக்கைகள், தெய்வ கணங்கள், சடங்குகள், வழிபாட்டு முறை, மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுகள், அழகியல் சிந்தனைகள், மருத்துவ முறை, ஆடை அணிகலன்கள், மரபுசார் அறிவு, உலகப் பார்வை, நாட்டார் வழக்காறு" (இலக்கிய மானிடவியல், பக்.7-9) போன்ற பல்வேறு தரவுகளைச் சேகரிக்கவேண்டும் என்கிறார், பக்தவத்சலபாரதி.

'ஆறுகாட்டுத்துறை' நாவலில் இடம்பெற்றுள்ள இனவரைவியல் கூறுகளை இங்கு அடையாளம் காண்பதற்கு முன், ஓர் இனவரைவியல் நாவலில் காணப்படும் செய்திகள் எவ்வாறு பெறப்படுகின்றன என்பது பற்றி ஆ.சிவசுப்பிரமணியன் தரும் விளக்கத்தினைக் காண்போம். ஒரு நாவலாசிரியன் இனவரைவியல் செய்திகளை,

"(1) சுய அனுபவம்

(2) கள ஆய்வு முறை

(3) நூலறிவு" (இனவரைவியலும் தமிழ்நாவலும், ப.10) என்ற மூன்று வழிமுறைகளில் தெரிந்துகொள்கிறான் என்கிறார். அந்த வகையில், கள ஆய்வு முறையைப் பின்பற்றிய தமிழ்ப் பெண் நாவலாசிரியரான ராஜம் கிருஷ்ணனைத் தொடர்ந்து அவ்வரிசையில், சு.தமிழ்ச்செல்வியை அடையாளம் காண இயலுகிறது. அவரின் நாவல்கள் பெரும்பாலும் கள ஆய்வினை மையமாகக் கொண்டு எழுந்தவையாகும். குறிப்பாக, அவரின் கள ஆய்வுகளும் வாழ்வியல் அனுபவங்களும் எந்தப் பகுதியை மையமிட்டிருக்கின்றன என்பது பற்றி, சு.தமிழ்ச்செல்வியின் நாவல்களை இனவரைவியல் ஆய்வுக்குட்படுத்திய ஆய்வாளர் சே.பத்மா, "ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தின் தென்கிழக்குக் கடல் மற்றும் கடல் சார்ந்த பகுதியைக் கதைக்களமாகக் கொண்டு தம் படைப்புகளைப் படைத்துள்ளார்" (முனைவர் பட்ட ஆய்வேடு, ப.344) எனும் குறிப்பின்வழி உணர்த்துகிறார். இதன் அடிப்படையில், 'மாணிக்கம்', 'அளம்', 'கற்றாழை', 'சிலாவம்' உள்ளிட்ட நாவல் வரிசையில் 'ஆறுகாட்டுத்துறை' நாவலும் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தினைப்பெறுகிறது. இந்நாவலின் உள்ளடக்கத்தினை இனவரைவியல் நோக்குடன் இனி அணுகலாம்.


**கதைமாந்தர்கள்**

'ஆறுகாட்டுத்துறை' நாவலில் சமுத்திரவல்லி, சாமுவேல், அருள்தாசு, சிங்காரவேலு நாட்டார், பூங்காவனம், சுப்பு, சேதுபதி, தங்கலெட்சுமி, பூவழகி, வேல்முருகன் உள்ளிட்ட பாத்திரங்கள் முதன்மை மற்றும் துணைமை மாந்தர்களாக இடம்பெறுகின்றன என்பதை அறியமுடிகிறது.

**கதைப்பின்னலும் கதைக்கருவும்**

சவரிமுத்துவின் சொந்த ஊர் திருச்செந்தூர். அதே ஊரைச் சேர்ந்த ஆரோக்கியமேரியினைக் காதல் திருமணம் செய்துகொண்டு ஆறுகாட்டுத்துறைக்கு வந்துவிடுகின்றனர்.

சவரிமுத்து – ஆரோக்கியமேரி தம்பதிக்கு சாமுவேல், அருள்தாசு என்ற இரு மகன்கள் இருக்கின்றனர். ஒருநாள் ஆரோக்கியமேரி கருவாட்டு வியாபாரத்திற்கு வண்டியில் செல்லும்போது, தூக்கக் கலக்கத்தில் வண்டியிலிருந்து தலைகுத்த கீழே விழுந்து இறந்து போகிறாள். சவரிமுத்துவும் மனைவி இறந்த எட்டாம் நாள் ஆழ்கடலில் மூழ்கி வலையினைச் சிக்கெடுக்கச் செல்லும்போது பெரிய வேளா மீன் தாக்கி உயிரிழந்து விடுகிறார். சாமுவேல்தான் தம்பியினைக் கடல்தொழில் செய்து படிக்க வைக்கிறான். ஆறுகாட்டுத்துறையில் வசித்துவரும் சிங்காரவேலு நாட்டார் – பூங்காவனம் தம்பதிக்கு சேதுபதி என்ற மகனும் சமுத்திரவல்லி என்ற மகளும் இருக்கின்றனர். சிங்காரவேலு நாட்டார் கடலைக் கடவுளாக வணங்கித் தவமிருந்து பெற்றமகள் சமுத்திரவல்லி. சமுத்திரவல்லி சாமுவேல் மீது காதல் கொள்கிறாள். சாமுவேலும் காதல் கொள்கிறான். ஊர்க்கட்டுப்பாடு, பிழைப்புக் கருதி மணக்கத் தயங்குகிறான். ஆனால், சமுத்திரவல்லிக்கு சாமுவேலைத் தவிர வேறு எந்த ஆடவனையும் மணக்க விருப்பம் இல்லாததால் வீட்டைவிட்டு வெளியேறி வந்து அவனையே திருமணம் செய்து கொள்கிறாள்.




ஊர் புறக்கணிப்பதாகவும், சமுத்திர வல்லியின் அண்ணன் சேதுபதியின் திருமணத்திற்கு அழைக்காதது எனப் பல்வேறு காரணங்களைக் காட்டி சமுத்திரவல்லியை வெறுக்கிறான், சாமுவேல். ஒரு நாள் அவளிடம், தனக்கு ஆண் குழந்தையே பிறக்க வேண்டும் எனவும், பெண் குழந்தை பிறக்கக்கூடாது எனவும் கூறுகிறான். பெண் குழந்தை பிறந்ததை அறியாமலேயே, கடலுக்குச் சென்று சுழலில் மாட்டிக்கொண்டு கட்சல் பகுதிக்குச் சென்று விடுவதாக நாவல் நகர்கிறது.

ஆதரவற்று நிற்கும் சமுத்திரவல்லிக்கும் அவளின் பெண் குழந்தையாகிய பூவழகிக்கும் அடைக்கலம் கொடுக்கிறது, சிங்காரவேலு நாட்டாரின் குடும்பம். சாமுவேல் காணாமல் போனதால், அவனின் தம்பி அருள்தாசை மீன் விற்றும், விறகு வெட்டியும் படிக்க வைக்கிறாள், சமுத்திரவல்லி. இவ்வாறு நான்கு வருடங்கள் கழிகின்றன. அவனும் படித்து முடித்து அரசாங்க வேலையும் கிடைக்கப்பெறுகிறான். தன் அண்ணனால் ஆதரவற்று நிற்கும் அண்ணி சமுத்திரவல்லியைத் தானே திருமணம் செய்துகொள்ள நினைக்கிறான். சமுத்திரவல்லி அதற்கு மறுத்தாலும், தன் குடும்பம், மகள், ஊர் மக்களின் வற்புறுத்தல் போன்றவற்றால் அவனை மறுமணம் செய்து கொண்டு அவனால் வேல்முருகன் என்ற ஆண்குழந்தையைப் பெற்றெடுக்கிறாள்.

ஆறு வருடங்கள் கழித்து சாமுவேல் வீட்டிற்கு வருகிறான். அவனைக் கண்ட சமுத்திரவல்லி ஒருபுறம் மகிழ்ச்சி அடைகிறாள். மறுபுறம் வேதனையும் அடைகிறாள். தான் பெரும் தவறு செய்ததாகத் தன்னையே நொந்துகொள்கிறாள். சாமுவேல் நடந்தவற்றைச் சுப்புவின் மூலம் அறிந்து, தனது தம்பியையும் அவன் குழந்தையையும் கொல்லத் துணிகிறான். அவனிடம் இருந்து தப்பித்து அருள்தாசு குழந்தையைத் தூக்கிக்கொண்டு தப்பித்து விடுகிறான். பின்பு, சமுத்திரவல்லியையும் கொலை செய்ய நினைத்து அவளிடம் ஆசை வார்த்தைகள் கூறி, ஆழ்கடலுக்குச் சென்று அங்கு ஏற்படும் சூழலில் தள்ளிவிட நினைக்கிறான். ஆனால், அச்சூழலில் அவனே மாட்டிக் கொண்டு இறந்து விடுகிறான். இறுதியாகச் சமுத்திரவல்லி கரை சேர்கிறாள். இவ்வாறாக நாவலின் கதை விரிகிறது.

**நில அமைப்பும் சுற்றுச் சூழலும்**

உலக மக்கள் தங்கள் நில அமைப்புக்கும் சுற்றுச் சூழலுக்கும் ஏற்ப தங்களுக்கான வாழ்வியலைக் கொண்டுள்ளனர். அவ்வாறு, பரந்த கடலைத் தொழில் களமாகவும், கடற்கரையை வாழிடமாகவும் கொண்ட மீனவர்களின் வாழ்வியலையும் எடுத்தியம்பும் நாவலாக அமைகிறது, 'ஆறுகாட்டுத்துறை'. நாவலாசிரியர் சு.தமிழ்ச்செல்வி, நாவலில் சுட்டப்பெறும் ஊரின் பெயரையே நாவலுக்குத் தலைப்பாகச் சூட்டியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்திற்கு அருகிலுள்ள ஒரு மீனவ மக்களின் நிலவியலைக் கொண்ட ஊர், ஆறுகாட்டுத்துறை. இடையிடையே அவ்வூரைச் சுற்றியுள்ள தேத்தாக்குடி, தோப்புத்துறை, செம்போடை, வேதாரண்யம், கோடியக்கரை போன்ற ஊர்களும் திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, திருச்சி, நன்னிலம், தஞ்சாவூர் போன்ற பெரு ஊர்களும் நாவலில் ஆங்காங்கே இடம்பெறுகின்றன.

இவர்களின் சுற்றுச் சூழலானது, கடலையும் கடற்கரைப் பரப்பையும் ஒட்டி அமைந்துள்ளதை, நாவலின் தொடக்கம் முதல் இறுதி அத்தியாயம் வரை அழகுற காட்சிப்படுத்தியுள்ளார், நாவலாசிரியர். 'திக்குத் திசை தெரியாத நீர்ப்பரப்பு எங்கும் ஒரே அமைதியாய் இருந்தது. ஒன்றன்பின் ஒன்றாகத் தட்டித்தட்டிச் செல்லும் சிறுசிறு அலைகள்" (ஆறுகாட்டுத்துறை, ப.1) எனவும், "கடற்கரைக்கும் ஊருக்கும் இடையே தெற்கு வடக்காய் நீண்டு கிடந்தது ஓட்டமான அப்பகுதி. கடற்கரை மணலுடன் கருஞ்சேறு கலந்த நிலப்பகுதி. கடல் கொந்தளித்தால் கடற்கரையில் கடல்நீர் ஏறுவதற்குள் எங்கிருந்தோ இப்பகுதிக்குத் தண்ணீர் ஓடி வந்துவிடும். கோடையில் உப்பின் பளபளப்பு மேல்மண்ணில் தெரியும். இப்பகுதியெங்கும் இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கருவாட்டுக் கொட்டகைகள் போடப்பட்டிருந்தன." (ஆறுகாட்டுத்துறை, ப.60) எனவும் ஆறுகாட்டுத்துறையின் கடற்கரையைக் காட்சிப்படுத்தியுள்ளார், சு.தமிழ்ச்செல்வி.

**உணவு முறைகள்**

சங்க காலத்திலிருந்து தற்காலம் வரையிலும் மக்கள் தங்கள் வாழிடங்களுக்கு ஏற்றவாறே அவர்கள் உணவு முறையினை அமைத்துக் கொண்டுள்ளனர். ஆறுகாட்டுத்துறை நாவலானது நெய்தல் நிலப்பகுதியாதலால், அங்கு மீன் சார்ந்த உணவே முக்கியத்துவம் பெறுகிறது. நாவலில் கடலுக்குச் செல்லும் சாமுவேல், சுப்பு, வீரன், சேகர் ஆகிய நால்வரும் மீன் உணவு உண்டதை, "வீரா கஞ்சிக் கலயத்த எடுத்தா. ஆளுக்கு நாலு திம்பம்" என்றார் சுப்பு. நான்கு பேருக்கும் போதுமான சாப்பாடு வீரன் வீட்டிலிருந்து வந்திருந்தது. தண்ணீர் ஊற்றிய சோறும் தொட்டுக்கொள்ள புளி ஊற்றிய அவித்த மீனுமாய் எடுத்துக்கொண்டு வந்திருந்தான்." (ப.47) மேலும் கடற்கரையில் சிங்காரவேலு நாட்டார் வலையைச் சரிசெய்து கொண்டிருக்கும்போது, அவரின் மனைவி பூங்காவனம், காலையில் வடித்த கஞ்சி சோறும், தொட்டுக்கொள்ள **வறுத்த வாலைக் கருவாட்டுத் துண்டையும்** உணவாகக் கொடுக்கிறாள் (ப.66). அடுப்பில் வாணலியின் **மீன் முட்டையைப்** பொரித்துக் கொண்டிருந்தாள் சமுத்திரவல்லி. வெள்ளை வெள்ளையாய் பெரிய சௌவரிபோல இருந்தது மீன்முட்டை. இதுபோன்ற சினை முட்டைகள் பெரிய கெளுத்தி மீன்களில் மட்டுந்தான் இருக்கும். மற்ற மீன்களின் சினை மஞ்சளாய் ரவையைப் போலிருக்கும். (ப.161) என்றும் கர்ப்பமாய் இருக்கும் பெண்கள் இதுபோன்ற முட்டை சாப்பிட்டால் உடலுக்கு வலுவென்றும் நாவலில் பதிவு செய்துள்ளார், நாவலாசிரியர்.

இதுபோன்ற நாவலில் மீன் சார்ந்த உணவுமுறை பல இடங்களில் காணப்படுகின்றன. அவ்வகையில், மீன், கருவாடு போன்ற உணவுகள் நெய்தல் நிலத்தின் அடையாளமாக இருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

**புழங்குபொருட் பண்பாடு**

மக்கள் தங்கள் வாழ்வில் அன்றாடத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் அனைத்துப் பொருள்களும் புழங்குபொருட்களே ஆகும்.

புழங்கு பொருட்கள் ஒரு சமூகத்தினரின் வாழ்வியல் முறை, பண்பாடு, தொழில் நுட்பத்தைப் பிரதிபலிப்பவையாக உள்ளன. ஆறுகாட்டுத்துறை நாவலில் மீனவர்களின் கட்டுமரம், மரக்கணம், தொடுமரம் போன்ற மீன்பிடிப் படகுகளும் பல்வேறு வகையான மீன் வலைகளும் சுட்டப்படுகின்றன. மேலும், குத்தீக்கட்டி (ப.31), கொடிநாட்டு (ப.45), போசாக்கட்டை (ப.47), ஐஸ்பெட்டி (ப.71), கோட்டுமால் (ப.84), அணியம் (ப.11,36), பாய் (114), மிதப்புக்கட்டை (ப.164), ரால்நெட்டு (ப.155), காவு கம்பு (ப.36), வலைக்கயிறு (ப.6), பால்மரம் (ப.3), அட்டி (ப.11) என மீனவர்களின் பல்வேறு தொழிற்களக் கருவிகள் புழங்குப் பொருட்களாக இடம்பெற்றுள்ளன.

மேலும், அன்னக்கூடை (ப.61), அம்முக்குத்தி (ப.61,181), மீன்கூடை (ப.204), அடுக்குப்பானை (ப.149), கலயம் (ப.170), அரிக்கன் (ப.173) போன்ற அவர்களின் வீடுகளில் பயன்படுத்தப்படும் புழங்குப் பொருட்களை அடையாளம் காண முடிகிறது. இதில் இடம்பெறும் அன்னக்கூடை, மீன்கூடை, அம்முக்குத்தி போன்ற மனைக்கலப் பொருட்கள் மீனவப் பெண்களின் தொழில்கருவிகளாகும். ஆனால், இவற்றில் பெருத்த மாற்றங்களை இன்றைய மீனவர்கள் சந்தித்துள்ளனர். மரக்கலங்களுக்குப் பதிலாக, பிளாஸ்டிக் - பைபர் மற்றும் இயந்திரப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் மரக்கலங்களையும், பிளாஸ்டிக் சார்ந்து வலை, பிற மீன்பிடித் தொழிற்கருவிகளை மீனவ மக்கள் பயன்படுத்தி வருவதையும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். இத்தகைய வாழ்வியல் மாற்றத்திற்கு, "வாழ்வியல் முறையாகவும், அதன் அர்த்தமாகவும் அமைவது பண்பாடு. அதன் ஒரு பகுதியே புழங்குபொருட்கள். இன்னொரு வகையில், சொல்வதானால் மக்கள் தாம் வாழும் சுற்றுச் சூழலுக்கும் காலத்திற்கும் ஏற்ப தம்மைத் தகவமைத்துக் கொள்கின்றனர்" (மானிடவியல் பேசுவோம், ப.120) பேரா. பக்தவத்சலபாரதி அளிக்கும் குறிப்பு, மிக நெருக்கமானதாக அமைவதைக் காணலாம்.

**தொழில் – பொருளாதார நிலை**

மனிதன் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள பொருளாதாரம் அவசியமாகிறது. அப்பொருளாதாரத்தைப் பெற தொழிலே அடிப்படையாக உள்ளது. சங்க காலம் முதலே அந்த நிலத்தின்தன்மைக்கேற்ப இயற்கையோடு தொடர்புடைய தொழில்கள் அமைந்திருப்பதை அறிகிறோம். அவ்வகையில், நெய்தல் நிலமானது கடலும் மணலும் சார்ந்த நிலமாதலால், அவர்களின் தொழிலும் அதனையொட்டியே அமைந்துள்ளது. 'ஆறுகாட்டுத்துறை' நாவலும் இது குறித்துப் பதிவு செய்ய தவறவில்லை. நாவலில், மீனவர்கள் மீன்பிடித் தொழிலையே தங்களின் முதன்மையான தொழிலாகக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. நாவலில் வரும் சாமுவேல், சிங்காரவேலு நாட்டார், சேதுபதி, சுப்பு, சவரிமுத்து போன்ற ஆண் கதைமாந்தர்கள் மீன்பிடித் தொழில் மேற்கொள்வதாகச் சுட்டியுள்ளார், சு.தமிழ்ச்செல்வி. அத்துடன், சாமுவேலின் தந்தை சவரிமுத்து ஆழ்கடலில் மூழ்கும் முழுக்காளி தொழிலையும் மேற்கொண்டுள்ளார் என்கிற செய்தியும் கிடைக்கிறது.




கடலிலிருந்து பிடித்துவரப்படும் சிறிய வகை மீன்களையும், கருவாடுகளையும் சந்தைக்கும் மக்கள் குடியிருப்புகளுக்கும் கொண்டு சென்று விற்கும் தொழிலைப் பெண்கள் மேற்கொள்வதை சமுத்திரவல்லி உள்ளிட்ட கதாபாத்திரங்களின் வழி பதிவு செய்கிறார்.

அதேபோல், படகுகள் மீன்பிடிக்கச் செல்லாத நாட்களில் அவ்வூர் பெண்கள் விறகு வெட்டி விற்றுப் பணம் ஈட்டுவதையும் (ப.194), நெட்டி, பீலி போன்றவைகளை எடுத்து வியாபாரம் செய்வதையும் நாவலில் காணமுடிகிறது. அவர்களின் பொருளாதார நிலையானது, நாள்தோறும் மீன் விற்றுப் பணம் கிடைத்தால் மட்டுமே அவர்களின் வாழ்க்கையை நகர்த்தமுடியும் என்பதை நாவலில் ஒரு காட்சி சித்திரிக்கிறது. அக்காட்சி வருமாறு: "ஒனக்கென்ன கெழவி நீ சூத்தக் கொட நவத்தி வைக்காம ஒக்காந்த எடத்துலயே ஒக்காந்துக்கிட்ட எடுப்புமீனு எடுத்து ஓங்கதய கட்டிடுவ. எங்களச் சொல்லு. உச்சில சொமந்துக்கிட்டு ஓடி உடியாந்தாத்தான நாலு பருக்கய தட்டுல பாக்கலாம். எங்களுக்குச் சரக்குக் கெடக்கணுமே சம்பாத்தியம் பாக்கணுமேங்குற கவலயாதான இருக்கும்."

**தெய்வ வழிபாடு**

மீனவர்களின் வாழ்வியலில் தெய்வம் சார்ந்த நம்பிக்கைகளும், அந்நிலத்தைச் சார்ந்த தெய்வங்களைப் பலவாறாகப் பூசிக்கின்ற வழிபாட்டு முறைகளும் இருந்துவருவதை நாவலில் பல இடங்களில் பதிவு செய்துள்ளார் நாவலாசிரியர். அது மட்டுமல்லாமல், அம்மக்களிடையே தெய்வம் பற்றிய வரலாறுகளையும், அத்தெய்வங்கள் ஆறுகாட்டுத் துறைக்கு எவ்வாறு வந்தன என்பதைப் பற்றிய நம்பிக்கைக் கதைகளையும் நாவலில் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம், அம்மக்களிடையே தெய்வம் குறித்தான நம்பிக்கைகள் இருந்துள்ளதை அறியலாம். **சமுத்திராதேவி, மலையாள வீரன், மன்மதன், காளியம்மன், கரவத்தம்மன், நடுக்காட்டய்யா, கரைகாத்த அம்மன்** போன்ற தெய்வங்களைப் பற்றிய குறிப்புகள் நாவலில் காணப்படுகின்றன.

ஆறுகாட்டுத்துறையில் இயற்கை வழிபாடே முதன்மைப் பெற்றுள்ளதாக அறியமுடிகிறது. அம்மக்களின் முதன்மை வழிபாடாகக் கடலே விளங்குகிறது.

நாவலில், அவர்களின் தாயாக விளங்குகின்ற 'சமுத்திரதேவி'யின் பெயர் நாவலின் தொடக்கம் முதலே இடம்பெறுவதைக் காணமுடிகிறது."தாயே சமுத்திராதேவி, இதே கடற்கரையில இருவது வருசத்துக்கு மின்னாடி யாம் பொண்டாட்டி பட்ட வேதனய சகிச்சக்கிட முடியாம யாங் அங்கத்த ஒம் மடில போட்டு உருண்டு பெரண்டன். அழுது களைச்சன்..." (ப.179) என்று தன் மகளின் பிரசவம் நல்லபடியாக நடக்க வேண்டும் என்று சிங்காரவேலு நாட்டார், சமுத்திரதேவியிடம் வேண்டிக்கொண்ட காட்சி இடம்பெறுகிறது. மீனவர்களின் மத்தியில் கடலைத் தாயாகப் பாவிக்கும் நீண்டக்கால நம்பிக்கை இருந்துவருகிறது என்பது புலப்படுகிறது. கடலால் தங்களுக்கு நேரடியாகத் துன்பங்கள் விளையாது என்கிற நம்பிக்கையும், இயற்கைச் சீற்றங்களான புயல், கடற்கோள் போன்ற பேரிடர்களைக் கடந்து கடல்தாய் தங்களைப் பாதுகாப்பாள் என்கிற நம்பிக்கையும் இம்மக்களிடையே ஆழமாக இருந்துவருகிறது. இந்நோக்கில் 'சுனாமிக்குப் பிந்தைய நாகை மாவட்ட மீனவர் வாழ்வு' எனும் நூலில் காணப்படும், 'கடல்தொழில் செய்கிற மீனவர்களுக்குக் கடல்தான் தெய்வம்' (ப.165) என்ற அ.இருதயராஜ் சே.ச. என்பாரின் கருத்து எண்ணத்தக்கது.

**நம்பிக்கைகள்**

ஆறுகாட்டுத்துறையில் புதிதாக விசைப்படகுகளை வாங்கி வந்தால், அவற்றைத் தொழிலுக்குப் பயன்படுத்தும்முன் அதற்குப் படையல் வைத்து அம்மக்கள் வழிபட்டதனை நாவலில் கூறிச் சென்றுள்ளார், நாவலாசிரியர் (பக்.48-50). வலை உறுதியாக இருக்க பச்சரிசி அல்லது கேழ்வரகு மாவில் காய்ச்சிய கஞ்சியில் தோய்த்துக் காயவைக்கும் முறை இருந்ததையும், இவ்வாறு செய்யும்போது, நனைத்த வலையின்மீது அவித்த கொழுக்கட்டை வைத்துப் படைக்கும் முறை ஆறுகாட்டுத்துறை மக்களிடம் இருந்ததையும் நாவலில் (பக்.141-142) பதிவு செய்துள்ளார். இதற்குக் 'கஞ்சி வைத்தல்' என்று பெயர்.

இவ்வாறு படைத்த கொழுக்கட்டையை உண்டால், கடலில் எந்தத் தீங்கும் நிகழாதென்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தனர் என்பதை, "படச்ச கொழுக்கட்ட பல்லு பட்டாலே போதும்பாவோ. கடல்ல பாம்பு படையெல்லாம் பயந்து வெலகிடுமாண்டா" என்று சுப்பு சாமுவேலிடம் கூறும் காட்சி அவர்களின் நம்பிக்கையைக் காட்டுகிறது. மேலும், "வேடன் பாய்ந்தால் காற்றும் கிளம்பும். அதிகமாய் பாய்ந்தால் கடல் கிளம்பும்" (ப.242) என்னும் நம்பிக்கை அவர்களிடையே இருப்பதை அறியலாம். வேடன் என்னும் 'ஓங்கில்மீன்' (டால்பின்) மனிதருக்குத் தீங்கு செய்யா உயிரனமாகவும், கடலில் பேரிடர் காலத்தில் எச்சரிக்கை சமிக்ஞைகளைக் கடலில் மேலெழும்பித் தருவதாகவும் சுட்டப்பட்டிருப்பதை இக்காட்சியின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

**மொழிநடை – வட்டார வழக்கு**

ஓர் இனத்தின் அடையாளமாக அந்தந்த வட்டாரங்களில் வழங்கப்படும் மொழியே திகழ்கிறது. குறிப்பிட்ட மக்கள் பிரிவினரின் பேச்சு மொழியையும் அவர்கள் வாழ்வியல் சூழலுடன் பொருந்தும் முறையிலான வருணனை மற்றும் படிமங்களையும் தமிழ் இனவரைவியல் நாவல்களில் பயன்படுத்தப்படுவதன் அவசியத்தை, "நாவல்களில் இடம்பெறும் பாத்திரங்களின் சமூக நிலை மற்றும் குணாம்சங்களுக்கேற்பவும், அவை இயங்கும் தளம் மற்றும் சூழலுக்கேற்பவும் அவற்றின் உரையாடலின் உள்ளடக்கமும் மொழிநடையும் அமைவது சிறப்பான ஒன்று" (இனவரைவியலும் தமிழ் நாவலும், ப.29) எனக் குறிப்பிடுகிறார், ஆ. சிவசுப்பிரமணியன். அவ்வகையில், தமிழ்ச்செல்வியின் 'ஆறுகாட்டுத் துறை' நாவலில் உரையாடலின்வழியாக, நாகை மீனவர்களின் வாழ்வியலை புலப்படுத்தும் வண்ணம் அச்சமூக மக்களின் குணாம்சங்களுக்கேற்பவும், சூழலுக்கேற்பவும், அக்கதை மாந்தர்களுக்கேற்பவும் அம்மீனவ மக்களின் வட்டார வழக்குச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

நாவலில் இடம்பெறும் உரையாடல் காட்சிகள் சில எதிர் வருகின்றன. "அதயாண்டி தங்காச்சி கேக்குற? கரியாப்பட்டிணம் பக்கமா கொண்ட விக்கிறவளாச்சே. நேரத்துல சரக்கெடுத்தா விடியிறத்துக்குள்ள காரேறி வெளிலுக்கு மின்ன வித்துட்டு வந்துடலாமுன்னு நெனச்சி **வெள்ளாப்புலயே** கரைக்கி வந்துட்டன்" (ப.62). "கத்தாள, காளாக்குட்டி, நாங்கலா, தோலி, பங்களான்னு எல்லாம் **சில்லுண்டியப் பொடியா** கலப்பா கெடந்துச்சி" (ப.62). "சிக்கெடுத்து சிணுக்கெடுத்து ஓட்ட ஒடசலப் பொத்தி அடுக்கி வச்சிட்டுப் போனாத்தான நாளக்கி கடலேற **சின்னாங்கு**" (ப.66, 153). என்கிற உரையாடல்களில், அவர்களின் வட்டார வழக்குச் சொற்கள் இயல்பாக இடம்பெற்றுள்ளன. இதில் குறிப்பிடப்படும், வெள்ளாப்பு (சூரியன் உதிக்கும் நேரமான விடியற்காலை), சில்லுண்டியப்பொடி (சிறிய வகை மீன்கள்) போன்றவை அவர்களுக்கே உரித்தான மொழியாக விளங்குகிறது. லெக்கு – திசை (ப.20), தௌசலு – சண்டைச் சச்சரவு (ப.47), மாப்பு – மீன் கூட்டமாக இருப்பது (ப.47), ஓஞ்சி – அமைதி (ப.52), அலுவ – வேலை (ப.101), மோடி – மந்திரவித்தை (ப.188), தங்கல் – கடலில் தங்கி மீன்பிடிப்பது (ப.208, 260), அணியம் – அருகில், கட்டுமரத்தின் முன்பகுதி (ப.11, 36), தொப்பலாய் – முழுவதுமாய் (ப.276), அந்திகணிசம் – நேரத்தைக் குறிப்பது (ப.260), சின்னாங்கு – எளிது (ப.66, 153) போன்ற பல்வேறு வட்டார வழங்குச் சொற்கள் நாவலில் காணப்படுகின்றன.

**சமூக / சாதிய அமைப்பு**

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களைத் தொழில் அடிப்படையில் 'மீனவர்கள்' (Fishermen) என்று வழங்கினாலும், தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே திருவள்ளுர் வரை உள்ள மாவட்டங்களில் வாழும் மீனவர்கள் சமூக அடிப்படையில் பல சமூகங்களாக அடையாளப்படுத்தப் படுகின்றனர்.

இவர்களை “முக்குவர், நுழையர், பரதவர், பரதர், செம்படவர், அம்பலக்காரர், வலையர், கரையான் / கரையாளன், கடையான், பூச்சிக்கடையான், படையாச்சி / மீன்பள்ளி, பர்வதராஜகுலம், சின்னபட்டினவர், பெரியபட்டினவர் என வகைப்படுத்தலாம்” (ப.xix) எனத் தமிழக மீனவர் தொழில் பண்பாட்டுச் சொல்லகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ‘சோழமண்டலம் உள்ளிட்ட தமிழகக் கடற்கரை நீண்ட நெடிய சூழியல் வரலாற்றையும், புவியமைப்பையும் கடல்வளத்தையும் கொண்டிருப்பதால், இவற்றைச் சார்ந்து வாழும் குடிகளின் பிரிவுகளும் படிநிலைகளும் கூட விரிவுபெற்றுவிட்டன. சின்ன, பெரிய பட்டிணவர், செம்படவர் (ஆறு தொடங்கிக் கடல் முகத்துவாரம் வரை மீன்பிடித் தொழில்செய்பவர்), கரையார், மீன்பள்ளி, நாட்டார், செட்டியார், சோழியர், மூழ்க்காளி, முக்குவர், பரதவர், முதலிபிள்ளை, வன்னியர், பறையர் எனப் பல்வேறு சமூகத்தார் கடல் தொழிலை நம்பி வாழ்கிறார்கள்’ (சுனாமிக்குப் பிந்தைய நாகை மாவட்ட மீனவர்களின் வாழ்வு, ப.13) என மானிடவியல் அறிஞர்கள் பக்தவத்சல பாரதி குறிப்பிடுகின்றார்.

ஆறுகாட்டுத்துறை நாவலில், ‘படையாச்சி’ எனும் சமூகப் பிரிவினர் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருவதாகச் சுட்டப்படுகிறது. “எங்கள பள்ளி படையாச்சின்னு சொல்லுறது. நாங்க குடியிருந்த எடத்துக்கு பள்ளித்தோப்புன்னு பேரு. இப்பயும் அந்த எட்த பள்ளித்தோப்புன்னுதான சொல்லுறாவோ. நீ கேட்டதில்ல?” (ப.74) என்று சுப்பு என்ற கதாபாத்திரம் சாமுவேலிடம் தங்களின் சமூகப் பின்புல வரலாற்றைக் குறிப்பிடுவதுபோல நாவலாசிரியர் அமைத்துள்ளார். வேதாரண்யம் பெரிய கோயிலில் பங்குப்பணிப் பொறுப்பும், சாமி பல்லக்குத் தூக்கும் பொறுப்பும் இப்பள்ளி / படையாச்சி மக்களுக்கு இருந்ததாகவும், சில செட்டியார் குடும்பங்கள் தோப்புத் துறையிலிருந்த கானாற்றுக் குளத்தில் மீன் பிடிப்பதைப் பார்த்து அவர்களும் அத்தொழிலைக் கற்றுக் கொண்டனர் என்றும், அவ்வாறே தங்கள் மக்களுடன் ஆறுகாட்டுத்துறைக்கு இடம்பெயர்ந்து வந்ததாகச் சுப்பு என்ற கதாப்பாத்திரத்தின் மூலம் அவர்களின் தொழில் வரலாறு நாவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பக்.73-77)

இதில் வரும் முக்கியப் பாத்திரமான சிங்காரவேலு நாட்டார் வழிவழியாகப் படையாச்சி என்ற சமூகத்தைச் சார்ந்தவரென்றும், ஆறுகாட்டுத்துறையில் ‘நாட்டார்’ என்ற பதவியில் இருந்த ‘கந்த படையாச்சி’யின் தலைமுறையினரே ஊரினை ஆண்டு வருகிறார்கள் என்பதும் நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது (ப.77). மேலும், சாமுவேலின் தந்தை சவரிமுத்து தன்னை எப்போதும் ஒரு ‘முழுக்காளி’ என்று சொல்லிக்கொள்ளும் இயல்புடையவராகக் காட்டப்படுகிறது (ப.7). முழுக்காளியும் மீனவச் சமூகத்தில் ஒரு பிரிவாக இருப்பதை அறியமுடிகிறது.

**நிர்வாக முறை**

மீனவர்களின் சமூகத்தில் நிர்வாக ரீதிய செயல்பாடுகளுக்கு, அவர்களுக்குள்ளாகவே பஞ்சாயத்து அமைப்பு முறை இன்றும் வட, தென் தமிழக கடலோர கிராமங்களில் காணப்படுவதை அறியமுடிகிறது. இந்த அமைப்பு வலுவாக இருப்பது, மீனவச் சமூக மக்களுக்குப் பாதுகாப்பையும், சுயக்கட்டுப்பாட்டையும், சுய நிர்வாகத் திறனையும் வழங்குவதாக அமைகிறது. இதனால் சில இடர்பாடுகளும் உண்டாகின்றன. ஆறுகாட்டுத்துறை நாவலில் ‘சிங்காரவேலு நாட்டார்’ என்ற கதாபாத்திரம் மூலம் அவர்களுக்குப் பரம்பரையாக இருந்துவரும் நிர்வாகப் பொறுப்பான ‘நாட்டாண்மை’ அல்லது ‘பஞ்சாயத்தார்’ முறையைப் பற்றி பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாவலில் சிங்காரவேலு நாட்டாரின் முயற்சியில், ஆறுகாட்டுத்துறைக்கு விசைப் படகுகள் வருதல், முன்பணம் கொடுத்து மீனவர்களைச் சுரண்டும் கம்பெனிகளைத் தடுக்க

குத்தகைதாரராகப் போராடி, ஆறுகாட்டுத்துறைக்கு 'மீனவர் நலச் சங்கத்தை ஏற்படுத்துதல்', தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை அலுவலகத்தின் முன் உண்ணாவிரதம் இருந்து போராடி, ஆறுகாட்டுத்துறைக்கு பெட்ரோலிய எண்ணெய் வங்கி (Petrol Bank) திறத்தல் எனப் பல்வேறு நிர்வாகப் பொறுப்பினை ஏற்று அவற்றைச் சிறப்புற செய்து முடித்தார் என்பதை நாவலின்வழி அறியமுடிகிறது. இது மீனவர்களின் நிர்வாகத் திறத்தினையும் தங்கள் பிரச்சனைகளைத் தாங்களே கையிலெடுத்துத் தீர்வுகாண முயலும் பாங்கையும் காட்டுகிறது.

**மரபுசார் அறிவு**

மீனவர்கள் இயற்கையின் வழியாகவும், தங்கள் மரபார்ந்த அனுபவத்தின் வழியாகவும் பல்வேறு அறிவியல் சார்ந்த சிந்தனைகளைக் கைக்கொண்டிருக்கின்றனர் என்பதற்குப் பல சான்றுகள் நாவலில் காட்சிகளின்மூலம் சுட்டலாம். நாவலில், "இதான்டாலே தாய் அல. இதுதான் கராக்கப் போற அல. இந்த அல வாக்குலயே போனா கரயாக்க பெயிறலாம். மரத்த வுடுங்க. பாய் கட்டிவுட்டா ஓட்டத்து வெரசா பெயிடும்" (ப.21) என்றார் சுப்பு. இக்காட்சியின் மூலம், அவர்களின் கடல் அலைகள் சார்ந்த புரிதலை உணரமுடிகிறது. கடல் அலைகளின் நீரோட்டம் வைத்தே, கரையின் திசையை நோக்கிய அலைகள் எவ்வாறு இருக்கும் என்பதைக் கணிப்பதுடன், காற்றின் திசையையும் அதனுடன் ஒத்திசைத்துப் படகில் பாயைக் கட்டிவிட கரையை இயதுவாக அடையலாம் என்கிற மீன்பிடித் தொழில்நுட்ப அறிவைக் கண்டுகொள்ளமுடிகிறது.

கடலில் சுழல்கள் அதிகம் உள்ள இடங்களையும் அவர்கள் அறிந்து வைத்திருப்பதை,"இந்த பாறக் கடலப் பத்தி ஒங்களுக்குத் தெரியுமா சித்தப்பா. செல சொழல மரக்கணத்தையே கவுத்து வுட்டுருமாமுல்ல" "இருவது பாவத்துக்கு மேல சொழலுல சிக்கிறக்கொடாது. பாறையும் மடுவும் பெரிசாருக்கும். சொழலும் வேகமாருக்கும். அது மேரி சொழலுல சிக்கிக்கிட்டா அவ்வளவுதான். மரக்கணத்துல ஒரு சில்லகொட முழுசாப் பாக்க முடியாது". (ப.10) எனும் காட்சியின் வழியாக அறிந்துகொள்ள முடிகிறது. கடலின் ஆபத்தான பகுதிகளை இனங்காணும் இத்தகைய சிந்தனையானது அவர்களுக்குள் வழிவழியாகக் கடத்தப்படுகிறது.

வானில் தெரியும் நட்சத்திரங்கள் மூலமும் அவர்கள் திசை மற்றும் கரையை அறியக்கூடிய திறன்கொண்டவர்களாக இருந்துள்ளதைப் பின்வரும் காட்சி புலப்படுத்தும். "அன்னாந்து வெள்ளியப் பாரு. அந்தக் கப்ப வெள்ளிய பாத்துக்கிட்டே வல்லாங் கையி பக்கம் மரத்த செலுத்துனா நேரா நம்ம தொறையில கொண்டாந்து வுட்டுரும்""சாமுவேல் அன்னாந்து வானத்தைப் பார்த்தான். ஏழெட்டு நட்சத்திரங்கள் ஒரேயிடத்தில் இருந்தன. பார்ப்பதற்கு கப்பல் போலவே இருந்தது. அதைப் பார்த்தபடியே பக்கவாட்டில் தன் இடதுகையை நீட்டினான்." "இப்புடி திக்குலயா மாமா இருக்கு நம்ம ஊரு?" "ஆமாம். நேரா போனாக்க நம்ம ஊரு, தெக்க சாச்சிப் போனா கோடியக்கர. வடக்க சாச்சிப் போனா நாகப்பட்டிணம். அங்குட்டு இருக்குறது வடக்கத்தி ஊருவ". (ப.152) என்றவாறு இடம்பெற்றுள்ள இக்காட்சியானது, கரையின் திசையை அடைய அவர்கள் கைக்கொண்டிருக்கும் இயற்கைசார் அறிவாகப் புலப்படுகிறது.

மேலும், அவர்கள் காற்றின் தன்மையை வைத்துப் புயல், பருவ மழைகளின் அறிகளைக் கணித்தல், பருவ காலத்திற்கு ஏற்ப கிடைக்கும் மீன் வகைகள், கிடைக்கும் மீன் வகைகளுக்கேற்ற மீன் வலைகளைப் பயன்படுத்துதல், மீன்பாடு கிடைக்கும் பாறைகள் (பார்), மீன் பிடிக்கும் முறை, அலைகளின் தன்மை வைத்து நீரோட்டம் பார்த்தல், இடையூறான காலங்களில் ஒதுங்கவேண்டிய இடங்கள் அல்லது தீவுகள் போன்ற அனைத்தையும் மீனவர்கள் தங்கள் மரபுவழி அனுபவ அறிவின் மூலம் அறிந்து வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது (ப.260). இன்றைய சூழலில் பல்வேறு தொழில்நுட்பக் கருவிகள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நாவலில் காணலாகும் இனவரைவியல் கூறுகளைப் பின்வரும் பட்டியலில் காணலாம்.

**காற்று வகைகள்**

- ✓ எதிர்க்காற்று (ப.47)
- ✓ சித்திரைக் குழப்பிக்காற்று (ப.93)
- ✓ குன்னுவாடை காற்று (ப.177)
- ✓ வாடைக் கொண்டல் காற்று (ப.10)

**மீன் வகைகள்**

- ❖ வேளா (ப.19)
- ❖ கத்தாள, காளாக்குட்டி, நாங்கலா, தோலி, பங்காளன் (ப.63)
- ❖ கத்தாளை, கொடுவா, திருக்கைகள் (ப.71)
- ❖ கடல்சுறா (ப.106)
- ❖ பறவைக்கோலா (ப.154)
- ❖ கெளுத்தி மீன் (ப.161)
- ❖ காளா, சீலா, உல்லம், பூவாளி (ப.209)
- ❖ வேடன் (ப.242)
- ❖ பெரிய கொடுவா (ப.270)

**மீன் வலைகள்**

- ➢ திருக்க வலை (ப.72)
- ➢ தடச்சவல (ப.141)
- ➢ மடிவல (ப.155), பேந்தவல, தெளிஞ்சவல
- ➢ தங்கூச (ப.155)
- ➢ கூட்டுவல (ப.193)
- ➢ பீஸ்வல (ப.209)
- ➢ திருக்கவல, நண்டுவல, சலங்கவல, வாலாவல (ப.209)
- ➢ மடிவல (ப.273)

**அகராதிக் குறிப்புகள்**

1) அணியம் – படகு மற்றும் கட்டுமரத்தின் முன்பகுதி
2) சலங்கைவலை – இறால் பிடிக்கும் வலை
3) தங்குசுவலை – நெத்திலி மீன் பிடிக்கப்பயன்படும் வலை
4) ரால் நெட் (டிரால் நெட்) – விசைப்படகுகளில் இழுவை வலையாகப் பயன்படும் கயிறு, தலை வலை, உடல், மடி எனும் நான்கு பிரிவாக அமைந்திருக்கும் மடியின் வடிவம்.
5) தடச்சவலை, தடச்சிவலெ–ஒரு வகை வலை
6) திருக்கவலை – வலுவான தடித்த நைலான் கயிற்றினால் பின்னப்பட்ட 10 அடி அகலமும், 300 அல்லது 400 அடி நீளமும், ½ அடி அகலம் கொண்ட கலைக் கண்களையுடைய சுறா, திருக்கை மீன்களைப் பிடிக்கப்பயன்படும் வலை. இவ்வலையை முதல் நாள் கடலில் இறக்கி மறுநாள் எடுப்பர்.
7) நண்டுவல – பொருவா மீன், நண்டுகள் பிடிக்கப் பயன்படும் வலை. அறுந்துபோன சரி செய்ய முடியாத நிலையில் இருக்கிற வலைகளை ஒன்றாக இணைத்து மேல் பக்கம் ஒரு கயிற கட்டியம் மணி (அ) வலைக் கற்களை இணைத்துக் கட்டுவதே நண்டு வலை.
8) பேந்தவலை – கண்கள் சிறியனவாகப் பின்னிய வலை, கீழ் வலையின் வேறுபெயர்.
9) மடிவலை – பைவலை. இது 20 மீட்டர நீளம் 10 மீட்டர் அகலமும் உடையத. ஒன்றாம் எண்ணளவு உள்ள பட்டு நூலால் 1ொலால் 1 ½ மில்லி மீட்டர் கண்ணளவுடன் இயந்திரம் மூலம் பின்னப்படுகிறது.
10) வாலா வல – கீல் வலையின் வேறுபெயர். வாள்சுறா மீன் பிடிக்கப்பயன்படும் வலை.
11) கோட்டுமால் – கயிற்றுக்கூடை
12) தாவுகடல் – ஆழ்கடல்
13) தாவுகம்பு – துடுப்புக் கம்பு
14) மீன்பாடு – மீன் பிடிக்கப் போதல், ஒருமுறை வலையில் படும் மீனின் அளவு
15) குன்னுவாடை காற்று – தை, மாசி மாதங்களில் நான்கு திசைக் காற்றுகளும் ஓரிடத்தில் மோதும் காற்று, வடதிசை குளிர்காற்று.

16) வாடைக் கொண்டல் காற்று – ஐப்பசி, மார்கழி மாதங்களில் வடகிழக்குத் திசையில் இருந்து வீசும் காற்று.
17) சித்திரைக் குழப்பிக் காற்று – சித்திரை மாதத்தில் வீசக்கூடிய காற்று
18) மாப்பு – மீன்கூட்டம் அல்லது திரள்

**முடிவுரை**

நெய்தல் சார்ந்த வாழ்வியலைத் தொடர்ந்து பதிவு செய்கின்ற பெண் எழுத்தாளர்களுள் மிக முக்கியமானவராகச் சு.தமிழ்ச்செல்வி அறியப்படுகிறார். இவரின், 'ஆறுகாட்டுத்துறை' நாவலை மட்டும் மையமிட்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இதில், நில அமைப்பு, மீனவ மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், வட்டார வழக்கு, புழங்குப் பொருட்பண்பாடு, தொழில்முறை, பொருளாதாரம், நிர்வாக முறை, அறிவியல்சார் அறிவு உள்ளிட்ட பல்வேறு இனவரைவியல் கூறுகளை உள்ளடக்கியதாக விளங்கவல்லது என்பதற்கு, 'ஆறுகாட்டுத்துறை' நாவல் சிறந்த சான்றாக உள்ளதை அறியமுடிகிறது. கள ஆய்வும் வாழ்வியல் அனுபவங்களும் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள இந்நாவலில் குறிப்பிடப்படும் மீனவச் சமூக அமைப்பின் அண்மைக்கால வாழ்வியல் சார்ந்த பதிவாக இந்நாவலைக் கண்டுகொள்ள இடமுள்ளது.

**துணைநூற் பட்டியல்**


1) இருதயராஜ்.அ., சுனாமிக்குப் பிந்தைய நாகை மாவட்ட மீனவர் வாழ்வு (ஓர் ஊடாட்ட இனவரைவியல் ஆய்வு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2025.
2) சந்திரசேகரன்.இரா. (மு.ப.ஆ.), ஏழுமலை.சு. (ப.ஆ.), தமிழக மீனவர் தொழில் – பண்பாட்டுச் சொல்லகராதி, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை, 2023.
3) சிவசுப்பிரமணியன்.ஆ., இனவரைவியலும் தமிழ் நாவலும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2019.
4) தமிழ்ச்செல்வி.சு., ஆறுகாட்டுத்துறை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2013.
5) தனஞ்செயன்.ஆ., தமிழில் இலக்கிய மானிடவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2014.
6) பக்தவத்சலபாரதி, இலக்கிய மானிடவியல், அடையாளம், புத்தாநத்தம், திருச்சி, 2014.
7) பக்தவத்சலபாரதி, மானிடவியல் பேசுவோம், அடையாளம், புத்தாநத்தம், திருச்சி, 2023.
8) பத்மா.சே., இனவரைவியல் நோக்கில் சு.தமிழ்ச்செல்வி நாவல்கள் (முனைவர் பட்ட ஆய்வேடு), சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி, 2024.
9) பெர்லின். குறும்பனை சி., கடலோரச் சொல்லகராதி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2024.
10) பெர்லின். குறும்பனை சி., நெய்தல் சொல்லகராதி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2020.
11) ஸ்டீபன்.ஞா., தொல்காப்பியமும் இனவரையியல் கவிதையியலும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, இரண்டாம் பதிப்பு - 2017.